இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 351 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 15 – புதன்கிழமை 31 ஜூலை 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 351: Thiruvalluvar Year - 2055 - Aadi 15 - Wednesday 31 July 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுகன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட

# ரூ.71.94 கோடியில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 31 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சிவகங்கை, தேனி, திருவாரூர், கள்ளக்குறிச்சி, மதுரை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 71 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சிவகங்கை, தேனி, திருவாரூர், கள்ளக்குறிச்சி, மதுரை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 71 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**புதிதாக கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

தங்களது ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 290 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 244 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியின் திட்டக்கூறு மூலம் சிவகங்கை மாவட்டம் – கண்ணன்குடி, மானாமதுரை, சிங்கம்புணரி, திருப்புவனம் மற்றும் திருப்பத்தூர், தேனி மாவட்டம் – தேனி மற்றும் கம்பம், திருவாரூர் மாவட்டம் – கொரடாச்சேரி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – தியாகதுருகம் மற்றும் ரிஷிவந்தியம், மதுரை மாவட்டம் – மேலூர், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம், திருவண்ணாமலை மாவட்டம் – துரிஞ்சாபுரம், திருவண்ணாமலை, பெரணமல்லூர், போளூர், கன்னியாகுமரி மாவட்டம் – தக்கலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வையம்பட்டி, வேலூர் மாவட்டம் – காட்பாடி ஆகிய இடங்களில் 71 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில்

# இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு!

## எடப்பாடி பழனிச்சாமியின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்து அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, ஜூலை 31-**

**சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு என்று எடப்பாடி பழனிச்சாமியின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்து பேட்டியளிக்கையில் அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.**

தலைமைச் செயலகத்தில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் ஏற்பட்ட தொடர் தோல்வியின் விரக்தியினால், இன்றைக்கு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாடு கொலை மாநிலமாக மாறிவிட்டது என்கின்ற ஒரு புதிய குற்றச்சாட்டை வைத்திருக்கின்றார். அவருக்கு நாங்கள் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், தமிழ்நாடு கொலை மாநிலம் அல்ல, கலை மற்றும் அறிவுசார் மாநிலம் தான் தமிழ்நாடு. இன்னும் சொல்லவேண்டும் என்றால், சமூக விரோதிகளை களையெடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடு. இதை அவர் உணர்ந்து கொண்டாக வேண்டும்.

அவருடைய ஆட்சியில் நடந்த சம்பவங்கள் ஆட்சியோடு தொடர்புடையவை. ஆனால், இந்த ஆட்சியில் எந்தச் சம்பவங்களும், வன்முறை சம்பவங்களும் ஆட்சியோடு தொடர்புடைய சம்பவங்களாக நடைபெற



வில்லை. கொடநாடு சம்பவம் என்று எடுத்துக்கொண்டால், அது அன்றைய முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய camp அலுவலகமாக இருந்தது. ஆனால் அங்கே தொடர் கொலை, கொள்ளை சம்பவங்கள் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது நடந்திருக்கின்றன. அது ஆட்சியாளர்களுடைய திறமையின்மையை காண்பிப்பதாக அமைந்திருக்கிறது அல்லது ஏதோ சதித்திட்டங்கள் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் கூட எனக்கு தெரியாது; நான் டிவியில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்று 13 உயிர்கள் பலியான சம்பவம் கூட முதலமைச்சராக இருந்து தனக்கு தெரியாது என்று தான் சொல்லியிருக்கிறாரே தவிர ஒப்புக்கொள்ளவில்லை. அப்போதுதான் தெரியும் என்று சொன்னார்.

**புதுச்சேரியில் நடந்த சம்பவம்!**

26, 27, 28ஆம் தேதிகளில் அவர் 5 சம்பவங்களை சொல்லுகிறார். அதில் ஒன்று புதுச்சேரியில் நடந்தது. அதையும் நம்முடைய தமிழ்நாட்டு கணக்கிற்கு எடப்பாடி பழனிச்சாமி கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால், அது புதுச்சேரியில் நடந்தது. மீதமுள்ள 4 சம்பவங்களும் அரசாங்கத்திற்கு தொடர்புடையவை அல்ல.

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

## மேட்டூர் அணை நிரம்பியது!

*மேட்டூர், ஜூலை 31 -*

*தென்மேற்கு பருவ மழையால் தமிழகத்தில் சிறியதும், பெரியதுமாக உள்ள 90 நீர்த்தேக்கங்களில் மேட்டூர் உட்பட 11 அணைகள் நிரம்பியுள்ளன. மொத்த நீர்த்தேக்கங்களில் 71.6 சதவீதம் நீர் இருப்பு உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*தமிழகத்தில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி, வெப்பச்சலனம், காற்றின் திசை மாறுபாடு உள்ளிட்டவை காரணமாக கடந்த மே மாதம் முதல் தொடர்ந்து மழைப் பொழிவு இருந்து வந்தது.*

*இதுகுறித்து தமிழக நீர் வளத் துறை அதிகாரிகள் கூறியதாவது: கர்நாடகாவில் தென்மேற்கு பருவ மழை அதிகமாக பொழிந்துள்ளதால், அங்குள்ள அணைகள் நிரம்பி காவிரி ஆற்றில் விநாடிக்கு 1.60 லட்சம் கனஅடி வரை தண்ணீர் வந்தது. பின்னர் நீர்வரத்து பாதியாக குறைந்தது. இருப்பினும், மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது.*

*தென்மேற்கு பருவ மழையால் சேலம் மாவட்டம் மேட்டூர் அணை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கெலவரப்பள்ளி, கிருஷ்ணகிரி அணைகள், தென்காசி மாவட்டம் குண்டாறு, திண்டுக்கல் மாவட்டம் மருதாநதி, வர்தமாநதி, தேனி மாவட்டம் மஞ்சளாறு, கோவை மாவட்டம் சோலையாறு, ஆழியாறு, திருப்பூர் மாவட்டம் அமராவதி, கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் துணைக் கடவு பெருவாரிபள்ளம் என 11 அணைகள் நிரம்பியுள்ளன.*